பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 02 2026 MONDAY 12.40 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு நாட்டின் திறனை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தூத்துக்குடி துறைமுக வளாகத்தில், வ உ சி கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் இன்று திறந்துவைத்தார்.

3. முன்னாள் மத்திய அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான முகுல்ராய் இன்று காலமானார்.

4. நேபாளத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் சென்னையின் கால்பந்து அணி இன்று மோஹன் பகான் அணியை எதிர்கொள்கிறது.

... இனி விரிவான செய்திகள்...

<<<<<<<>>>>>>

நாட்டின் திறன் உலக அளவில் வரவேற்புப் பெற்றுள்ளதற்கு எடுத்துக்காட்டாக புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு அமைந்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வாரலாற்று சிறப்புமிக்க உச்சிமாநாடு மூலம் இந்தியாவின் தொழில்நுட்பத் திறனை உலகளவில் பிரபலமாக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தொழில்நுட்பத்துறையில் நம் நாட்டின் இளையோர்களின் யோசனைகள் மனித குலத்திற்கு பயனுள்ளதாக அமையும் வகையில் இந்த செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு அமைந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்தியா செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டின் இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரகடனம் செயற்கை நுண்ணறிவில் உலகளாவிய ஒத்துழைப்புக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தூத்துக்குடி துறைமுக வளாகத்தில், வ உ சி கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், இன்று திறந்துவைத்தார்.

கப்பலோட்டிய தமிழன் என்று போற்றப்படும் வ உ சி-யின் வரலாற்றையும் , பாரம்பரியத்யும் வெளிப்படுத்தும் நவீன காட்சிகளுடன் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

கடல்சார் பாரம்பரியத்தை பற்றிய விழப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும் சுற்றுலா மற்றும் பொது பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலும் தேசிய அடையாளமாக இந்த துறைமுகத்தை வலுப்படுத்தும் நோக்கில் இது அமைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகத்தை மேம்படுத்தும் பணி, சரக்கு தளம் அமைக்கும் பணி ஆகியவற்றையும் அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட 60 டன் திறன் கொண்ட இழுவை படகையும் அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் பயன்பாட்டிற்கு தொடங்கிவைத்தார். துறைமுக மேம்பாட்டிற்கான மெய்நிகர் மாதிரி செயலியையும் அவர் தொடங்கிவைத்தார்.

தூத்துக்குடி துறைமுகத்தில் பாதுகாப்பு கட்டமைப்புகளையும் நவீன தீயணைப்பு எச்சரிக்கை கருவிகளையும் அவர் இன்று தொடங்கிவைத்தார்.

எரிசக்தி ஆற்றல் கட்டமைப்புத் திட்டங்கள், சாலை மற்றும் ரயில் போக்குவரத்து கட்டமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட மேலும் பல திட்டங்களையும் மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் இன்று தொடங்கிவைக்கிறார்.

<<<<<<<>>>>>>

முன்னாள் ரெயில்வே அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான முகுல்ராய், இன்று காலமானார். அவருக்கு வயது 71.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நிறுவன உறுப்பினரான முகுல்ராய், காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி 1998-ல் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.

பின்னர் 2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத்தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிட்ட அவர், வடக்கு கிருஷ்ணா நகர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

சட்டப்பேரவை தேர்தலுக்கு பின்னர் மீண்டும் அவர் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

முகுல் ராயின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், முகுல் ராயின் அரசியல் அனுபவம் மற்றும் சமூக சேவையை நினைவு கூர்வதாக தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், முகுல் ராய் தமது

வாழ்க்கையை பொது சேவைக்காக அர்ப்பணித்தவர் என குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியா — ஜப்பான் இடையேயான ராணுவ கூட்டுப்பயிற்சி உத்தராகாண்ட் மாநிலம் **Chaubattia**-வில் நாளை தொடங்கி அடுத்த மாதம் **9**ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக, இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த ராணுவ கூட்டப்பயிற்சிக்கு **Dharma Guardian** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து இந்த ராணுவ பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியா — ஜப்பான் நாடுகளுக்கு இடையே ராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க இந்த கூட்டுப்பயிற்சி வழிவகை செய்யும் என்று இந்தியா ராணுவம் அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

மதுரை திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற திமுக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் வழிபட்டபின், அவர் விடுத்துள்ள சமூக காணொலி பதிவில் இன்றைய தினம், இல்லங்களிலும், கோவில்களிலும் தீபம் ஏற்றி, கந்த சஷ்டி கவசம் பாடுவோம் என்று கூறியுள்ளார்.

***(Sound Byte — எல். முருகன் — 60 Sec.)***

<<<<<<<>>>>>>

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனை சேர்ந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து மீன்பிடி விசைப்படகையும் கைப்பற்றி சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டு, அங்குள்ள மீன்வளத்துறை அதிகாரிகள் இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர்கள் இன்று வெளியிட்டனர்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக இந்த வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 29 லட்சத்து 30 ஆயிரத்து, தொள்ளாயிரத்து 36 வாக்காளர்கள் இருப்பதாக மாவட்ட தேர்தல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் 12 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளதாக ஆட்சியர் திரு சதீஷ் தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — சதீஷ் — 39 Sec.)***

<<<<<<<>>>>>>>

விருதுநகரில் மத்திய அரசின் பெண்களுக்கு அதிகாரமளித்தல் திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சியில், மூவாயிரத்து **800** பெண் தொழிலாளர்கள் பங்கேற்று உலக சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்காவின் உலக சாதனை புத்தகத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கமலக்கண்ணன் -55 Sec. )***

<<<<<<<>>>>>>>

நேபாளத்தில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் **17** பேர் உயிரிழந்தனர்.

**Chiraundi Prithvi** நெடுஞ்சாலையில் காட்மாண்டு நோக்கி சென்ற பேருந்து, திரிசூல் ஆற்றில் கவிழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டது.

இதில், **11** ஆண்கள், இரண்டு வெளிநாட்டினர் உட்பட **17** பேர் உயிரிழந்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.

காயமடைந்த **26** பேர் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

மெக்சிகோவில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அந்நாட்டுக்கான இந்திய தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மெக்சிகோவில் குற்றவியல் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், பாதுகாப்புக்காக சாலை போக்குவரத்து மூடப்பட்டுள்ளதையடுத்து, இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் வசிக்கும் இந்தியர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தூதரகம் கூறியுள்ளது.

தேவையில்லாமல் வெளியே வர வேண்டாம் என்றும், வீட்டுக்குள் பாதுகாப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமை குறித்து உள்ளூர் நிர்வாகம் வெளியிடும் அறிவிப்புகளை பின்பற்றுமாறு வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் சென்னையின் அணி இன்று மோஹன் பகான் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>>